# காரைக்கால் நகராட்சி

## செய்தி குறிப்பு

தேதி : 04 ஜனவரி 2018

காரைக்கால் நகராட்சியில் "திடக்கழிவு மேலாண்மை திட்டம்" துவக்கப்பட்டு, கடந்த ஒரு வருட காலமாக வீட்டுக்கு வீடு மக்கும் குப்பை, மக்காத குப்பை, மறுசுழற்ச்சி குப்பை எனத் தரம் பிரித்து வாங்கப்பட்டு, அவற்றில் மக்கும் குப்பை உரமாக மாற்றம் செய்யப்பட்டு வருகிறது.

இந்நிலையில் வீடுகள் மற்றும் வணிக நிறுவனங்களில் சேரும் குப்பைகளை "Hand- in-Hand" நிறுவனம் மூலம் வீட்டுக்கு வீடு, மற்றும் வணிக நிறுவனங்களில் தினமும் குப்பைகள் பெறப்பட்டு வருகின்றன.

திடக்கழிவு மேலாண்மை விதிகள் 2016-ன் படி குப்பைகளை உருவாக்குபவர்கள் சமந்தப்பட்ட உள்ளாட்சி நிறுவனங்களுக்கு பயன்பாட்டுக் கட்டணம் (user charge) செலுத்தவேண்டும். அதன்படி வீடுகள் மற்றும் வணிக நிறுவனங்களில் இருந்து பயன்பாடுக் கட்டணம் வசூலிக்கப்படும் என அறிவிக்கப்படுகிறது.

நமது காரைக்காலை தூய்மையாக வைத்திருக்க பொதுமக்களும் வணிகர்களும் முழு ஒத்துழைப்பு அளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

ஆணையர்
காரைக்கால் நகராட்சி

4/1/18